**கடலூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிட். சேத்தியாதோப்பு-608702.**

**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**

2022-25- **ஆம் ஆண்டுகளுக்கான மூன்று ஆண்டு காலத்திற்கு வடபாதி, மாங்குளம், மங்களூர், ஆவினங்குடி, வேப்பூர், மாளிகைமேடு மற்றும் சேத்தியாதோப்பு ஆகிய தொகுப்பு பால் குளிவிப்பு மையங்களுக்கு பால் சேகரிப்பு பணி / திரவ நைட்ரஜன் மற்றும் தாது உப்பு கலவை விநியோக பணி / பால் உபபொருட்கள் விநியோக பணி / தலைவர் மற்றும் பொது மேலாளர் அலுவலக பணி ஆகிய பணிகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் வாடகைக்கு வாகனங்களை இயக்குவதற்கு ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.**

1. 19.05.2022 முதல் 21.06.2022 வரை அனைத்து அலுவலக வேலை நாட்களில் காலை 10.00 மணிமுதல் மாலை 4.00 மணி வரை ஒன்றிய தலைமை அலுவலகத்தில் ஒப்பந்தப்புள்ளி படிவங்களை பெற்றுக் கொள்ளலாம்.

2. விலை: – நேரடியாக ரொக்கம் செலுத்தி பெற்றுக் கொள்வதற்கு ரூ.500/– (வரிகள் உட்பட) தபால் மூலம் பெறரூ. 600/– (வரிகள் உட்பட) (அஞ்சல் ஆணை, காசோலை அஞ்சல் வழி, பண ஆணை கண்டிப்பாக ஏற்கப்படமாட்டது. **சேத்தியாதோப்பில்** மாற்றத் தகுந்த வரைவோலைகள் மட்டுமே ஏற்கப்படும்).

3. ஒப்பந்தப்புள்ளி படிவம் பூர்த்தி செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டிய கடைசி நாள். 22.06.2022 மற்றும் நேரம் பிற்பகல் 2.00 மணி வரை

4. ஒப்பந்தப்புள்ளி படிவம் திறக்கப்படும் நாள் 22.06.2022 மற்றும் நேரம் 2.45 மணி அளவில்

5. முன்வைப்புத்தொகை மற்றும் ஒன்றிய நிபந்தனைகள் **மற்றும்** வாகன வழித்தட விவரங்கள் ஒப்பந்தப்புள்ளி படிவங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

6. முன்வைப்புத்தொகையாக 700 கிலோ முதல் 1200. கிலோ வரை சுமை ஏற்றும் திறன் உள்ள வாகனங்களுக்கு ரூ.5000/–ம், 1.25 டன் முதல் 2.4 டன் வரை உள்ள வாகனங்களுக்கு ரூ.7500/–ம், 2.5 டன்அதற்க்கு **மேல்** உள்ள வாகனங்களுக்கு ரூ.10000/–ம், **என சேத்தியாதோப்பில்** மாற்றத்தக்க வகையில் வங்கி வரைவோலையாக, பொது மேலாளர் **க.மா.கூ.பா.உ.ஒன்றியம் என்கிற** பெயரில் செலுத்தப்பட வேண்டும்.

7. ஒப்பந்தப்புள்ளி படிவங்களை www.tenders.tn.gov.in வழியாக இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். மேலும் பூர்த்தி செய்யப்பட்ட டெண்டர் படிவங்களை "E" டெண்டர் மூலமாகவும் சமர்ப்பிக்கலாம். (www.tntenders.gov.in) ஒப்பந்தப்புள்ளி படிவங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஏற்கவோ நிராகரிக்கவோ அல்லது ரத்து செய்யவோ பொது மேலாளருக்கு முழு அதிகாரம் உண்டு.

கடலூர் மா. கூ. பா. உ ஒன்றியத்திற்காக

பொது மேலாளர்

**THE CUDDALORE DISTRICT COOPERATIVE MILK PRODUCERS'UNION LTD, SETHIYATHOPE-608 702.**

## TENDER NOTICE

Sealed Tenders are invited from the vehicle Owners for the operation of BMC Milk Collection / Mobile Veterinary / Procurement Taxi / Marketing Taxi / General Manager Office Taxi / Union Chairman Office Taxi / $Ln_2$ & Mineral Mixture Distribution / Bye Product Distribution Routes on Contract basis for the period of three years in 2022-2025.

The details are as follows.

| | | |
|---|---|---|
| 1 | Tender form sales | From 19.05.2022 to 21.06.2022 on all working days during 10.00 AM to 4.00 P.M. at Union Head Office at Sethiyathope. |
| | Cost of Tender form for – Direct sales | Rs.500.00 (Including of all Taxes) |
| | Cost of Tender form – Through Post | Rs.600.00 (Including of all Taxes) by submission of DD payable at Sethiyathope only. |
| 2 | Last date for tender form submission on | 22.06.2022 upto 2.00 PM |
| 3 | Date for tender forms opening on | 22.06.2022 at 2.45 PM |
| 4 | **Earnest Money Deposit:-** | DD in favour of General Manager, C.D.C.M.P. Union Limited, payable at Sethiyathope only. |
| | for Rural Milk / BMC Collection / Procurement Taxi / Marketing Taxi / General Manager Office Taxi / President Taxi Routes of Capacity of 700 Kg. to 1200 Kg. as Laden weight | Rs.5000.00 |
| | for Rural Milk Collection / BMC Collection Routes $Ln_2$ & Mineral Mixture Distribution / of Capacity of 1.25 Ton. to 2.4Ton. as Laden weight | Rs.7,500.00 |
| | for Rural Milk Collection / / Bye Product Distribution Routes of Capacity of 2.5 Ton and above. as Laden weight | Rs.10000.00 |
| 5 | TERMS AND CONDITIONS and the details of Milk Collection / Milk distribution Route / Taxi details are available in the Tender Forms. | |
| 6 | Tender form can be download at our Website www.tenders.tn.gov.in at free of cost and also be submitted through "E" Tender. (www.tntenders.gov.in) | |

GENERAL MANAGER

## GENERAL TERMS AND CONDITIONS

1. Sale of Tender forms, from 19.05.2022 to 21.06.2022 (10.00 AM - 4.00 PM on all working days)

2. Last date and time of submission of tender form on 22.06.2022 upto 2.00 PM.

3. Opening of sealed tenders on 22.06.2022 at 2.45 PM before the tenderers (or) the authorized representative by the Committee Members.

4. The Nominee / Rep. will be admitted only on production of the authorization letter given by the tenderer before the committee members.

5. The tender forms can be had from this office on all working days (10.00 AM to 4.00 PM) by paying of Rs.500/- (including taxes) at our union.

6. Tender form along with EMD by means of Demand Draft in favour of General Manager. C.D.C.M.P. Union Limited, Cuddalore payable at Sethiyathope. The tender from without EMD will be rejected.

7. EMD will be accepted only by means of Demand Draft drawn infavour of General Manager, C.D.C.M.P. Union Limited, Cuddalore Cash / cheque / Postal Order / Money Order will not be accepted on any circumstances.

8. The Tender Forms will also be sent by Post on receipt of Rs.100/- Extra towards the cost of Postage charges, along with tender form cost of Rs.500/- including taxes.

9. The union will not be responsible for the postal delay.

10. The General Manager, Cuddalore D.C.M.P. Union Limited, reserves to right to reject or cancel or postpone or modify the conditions in the tender fully or partially without assigning any reason, and without any prior notice.

11. The decision of the General Manager will be the final.

12. The tender forms details can also be obtained & download from the web site www.tenders.gov.in. at free of cost and also be submitted through "E" Tender. www.tntenders.gov.in

General Manager.

**கடலூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிட்., சேத்தியாதோப்பு.**

**(தொழில் நுட்ப படிவம் ) பகுதி- I**

2022-25- ஆம் ஆண்டுகளுக்கான மூன்று ஆண்டு காலத்திற்கு வடபாதி, மாங்குளம், மங்களூர், ஆவினங்குடி, வேப்பூர், மாளிகைமேடு மற்றும் சேத்தியாதோப்பு ஆகிய தொகுப்பு பால் குளிவிப்பு மையங்களுக்கு பால் சேகரிப்பு பணி / திரவ நைட்ரஜன் மற்றும் தாது உப்பு கலவை விநியோக பணி / பால் உபபொருட்கள் விநியோக பணி / தலைவர் மற்றும் பொது மேலாளர் அலுவலக பணி ஆகிய பணிகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் வாடகைக்கு வாகனங்களை இயக்குவதற்காக சமர்பிக்கப்படும் தொழில் நுட்ப படிவம்.

| | | | |
|---|---|---|---|
| 1. | ஒப்பந்தப் புள்ளி கோருபவரின் பெயர் மற்றும் முகவரி:<br>(தொலை பேசி / கைப்பேசி எண்களை அவசியம் குறிப்பிடவும்).<br>நிரந்திர முகவரிக்கான ஆதாரம் இணைக்கப்படவேண்டும் | | பாஸ்போர்ட் அளவு புகைப்படம் |
| 2. | வழித்தடத்தின் பெயர். | | |
| 3. | அ. வாகனத்தின் பதிவு எண். | | |
| | ஆ. வாகன உரிமையாளரின் பெயர். | | |
| 4. | வாகனத்தின் சுமையேற்றும் திறன் (பதிவுசான்றிதழில் குறிப்பிட்டுள்ளவாறு) | மொத்த எடை: | |
| | | வாகனத்தின் எடை: | |
| | | சுமையேற்றும் அளவு: | |
| 5. | **வாகனத்தின் உரிமம் (PERMIT) குறித்த விவரங்கள்:**<br>அ. பதிவு சான்று (RC) எண். | வாகனத்தின் அனைத்து ஆவண நகல்களும் இப்படிவத்துடன் இணைக்கப்படவேண்டும் அன்றேல் படிவம் நிராகரிக்கப்படும். | |
| | ஆ. தகுதி சான்று (FC)காலவதியாகும் தேதி. | | |
| | இ. காப்பீடு(Insurance) முடிவடையும் தேதி: | | |
| 6. | முன் வைப்புத் தொகையினை (EMD) கேட்பு வரைவோலையாக (DD) மட்டுமே இணைக்கவேண்டும். கேட்பு வரைவோலை இணைக்கப்படாத படிவங்கள் நிராகரிக்கப்படும். வாகனத்தின் உண்மை ஆவணங்களை கேட்கும்பொழுது சமர்பிக்கத்தவறினால் டெண்டர் விண்ணப்பம் நிராகரிக்கப்படும். மேலும், செலுத்தப்பட்ட முன் வைப்புத் தொகை திருப்பி வழங்கப்படமாட்டாது | கேட்புவரைவோலை எண். | |
| | | நாள்: | |
| | | வங்கியின் பெயர்: | |
| | | தொகை எண்ணால் ரூ. | |
| | | தொகை எழுத்தால் ரூபாய். | |
| 7. | நிரந்தர வாருமான கணக்கு (PAN)எண். | | |

மேலே குறிப்பிட்டுள்ள விவரங்கள் யாவும் உண்மை என்றும், எனது குடும்பத்தை சார்ந்த உறவினர்கள் எவரும் இவ்வொன்றியத்தில் பணிபுரியவில்லை என்றும்,வாகனத்தின் உண்மை ஆவணங்களை கேட்கும்பொழுது சமர்ப்பிக்கிறேன் என்றும் உறுதி கூறுகிறேன்.

ஒப்பந்தப் புள்ளி விண்ணப்பதாரரின் கையொப்பம்.

**கடலூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிட்., சேத்தியாதோப்பு.**

**(வணிக நுட்ப படிவம் ) பகுதி- II**

2022-25- ஆம் ஆண்டுகளுக்கான மூன்று ஆண்டு காலத்திற்கு வடபாதி, மாங்குளம், மங்களூர், ஆவினங்குடி, வேப்பூர், மாளிகைமேடு மற்றும் சேத்தியாதோப்பு ஆகிய தொகுப்பு பால் குளிவிப்பு மையங்களுக்கு பால் சேகரிப்பு பணி / திரவ நைட்ரஜன் மற்றும் தாது உப்பு கலவை விநியோக பணி / பால் உபபொருட்கள் விநியோக பணி / தலைவர் மற்றும் பொது மேலாளர் அலுவலக பணி ஆகிய பணிகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் வாடகைக்கு வாகனங்களை இயக்குவதற்காக சமர்பிக்கப்படும் வணிக நுட்ப படிவம்.

| | | | |
|---|---|---|---|
| 1. | ஒப்பந்தப் புள்ளி கோருபவரின் பெயர் மற்றும் முகவரி:<br>(தொலை பேசி / கைப்பேசி எண்களை அவசியம் குறிப்பிடவும்).<br>நிரந்திர முகவரிக்கான ஆதாரம் இணைக்கப்படவேண்டும் | | பாஸ்போர்ட் அளவு புகைப்படம் |
| 2. | வழித்தடத்தின் பெயர். | | |
| 3. | வாகனத்தின் பதிவு எண்.<br>(பகுதி- I தொழில் நுட்ப படிவத்தில் குறிப்பிட்டுள்ளவாறு) | | |
| 4. | பகுதி- I தொழில் நுட்ப படிவத்தில் குறிப்பிட்டுள்ள எனது வாகனம் தகுதியுள்ளதாக இருப்பின் கிலோ மீட்டர் ஒன்றிற்கு வாடகை கட்டணமாக கோரும் தொகை. சுங்க கட்டணம் உட்பட). | எண்ணால் ரூ.<br>எழுத்தால் ரூபாய் | |

------------------------------------------------------------ பணிக்கு ------------------------------------------------------------ வழித்தடத்தில் ஒப்பந்த அடிப்படையில் வாகனம் இயக்குவதற்கு வாடகை கட்டணமாக கிலோ மீட்டர் ஒன்றிற்கு ரூ.---------------- (ரூபாய் ---------------------------------- ------------------------------------------------------------ மட்டும்) (சுங்க கட்டணம் உட்பட) என்கிற விலையில் ------------------------------------------------------------ என்ற பதிவெண் கொண்ட எனது வாகனத்தை இவ்வொன்றிய நிபந்தனைகளுக்கு உட்பட்டு இயக்குவதற்கு சுயநினைவாக என் முழு மனதுடன் பரிபூர்ணமாக சம்மதம் தெரிவிக்கிறேன்.

ஒப்பந்தப் புள்ளி விண்ணப்பதாரரின் கையொப்பம்.

(அலுவலக முத்திரையுடன்)

**கடலூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிட்., சேத்தியாதோப்பு.**

இத்துடன் இணைக்கப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி படிவங்களை நன்றாக படித்து அதன்படி பூர்த்தி செய்ய வேண்டும்.

**ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் பின்வருமாறு இரு படிவ அடிப்படையிலான (Two parts System) படிவங்களாகும்.**

1. பகுதி I– தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளி படிவம் (Technical Bid) : ஒப்பந்தம் கோரப்படவுள்ள வாகனத்தின் பதிவு மற்றும் இதர ஆவணங்கள் கோரும் படிவம்.

2. பகுதி II – வணிக நுட்ப ஒப்பந்தப்புள்ளி படிவம் (Commercial Bid): ஒப்பந்தம் கோரப்படவுள்ள வாகனத்தின் வாடகை கட்டண விலைப்புள்ளி விவரம் கோரும் படிவம் .

3. பகுதி (I) தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளி படிவத்துடன் வாகனத்தின் அனைத்து ஆவணங்களின் நகல்கள், முன்வைப்புத்தொகைக்கான கேட்பு வரைவோலை, மற்றும் கையொப்பமிடப்பட்ட ஒப்பந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் இணைத்து அதற்காக வழங்கப்படும் உறையில் வைத்து மூடி முத்திரையிட வேண்டும். முன் வைப்புத்தொகைக்கான கேட்பு வரைவோலை பகுதி (1) படிவத்துடன் இணைக்கப்படாவிட்டால் டெண்டர் நிராகரிக்கப்படும். உறையின் மேல் "பகுதி (I) – தொழில்நுட்ப படிவம்" என்றும், "வழித்தடத்தின் பெயரையும்" தவறாமல் குறிப்பிடப்பட வேண்டும்.

   பகுதி (II) விலைப்புள்ளி படிவத்தில் வழித்தடத்திற்கான வணிகநுட்ப ஒப்பந்த விலைப்புள்ளி படிவத்தில் வழித்தடத்திற்கான விலைப்புள்ளி மட்டும் குறிப்பிட்டு தவறாமல் கையொப்பமிட்டு அதற்காக வழங்கப்படும் உறையில் வைத்து மூடி முத்திரையிட வேண்டும். பகுதி (II) படிவம் தவிர இதர படிவங்களில் விலைப்புள்ளி குறிப்பிடப்படுமாயின் டெண்டர் நிராகரிக்கப்படும். உறையின் மேல் "பகுதி (II) – வணிகநுட்ப ஒப்பந்தப்புள்ளி படிவம்" என்றும், "வழித்தடத்தின் பெயரையும்" தவறாமல் குறிப்பிடப்பட வேண்டும்.

   பகுதி (I) மற்றும் பகுதி (II) ஆகிய இரண்டு படிவத்திலும் அண்மையில் எடுக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளிதாரரின் வண்ண புகைப்படம் ஒன்றை அதற்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் ஒட்டி கையொப்பமிட வேண்டும்.

4. அ). தயார் செய்த பகுதி (I) மற்றும் பகுதி (II) ஆகிய இரண்டு தனித்தனி உறைகளையும் மூன்றாவதாக கொடுக்கப்பட்டுள்ள பெரிய உறையில் வைத்து மூடி முத்திரையிட்டு உறையின் மேல் கீழ்க்காணும் பெறுநர் முகவரியினை தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். வழித்தடத்தின் பெயரையும் குறிப்பிட வேண்டும்.

   பொது மேலாளர்,

   **கடலூர்** மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிட்.,

   **சேத்தியாதோப்பு,** புவனகிரி- வட்டம், கடலூர் மாவட்டம்- 608702.

| | | |
|---|---|---|
| (ஆ) ஒப்பந்தப்புள்ளி படிவம் பெறுவதற்கு கடைசி நாள் மற்றும் நேரம் | .. | **21.06.2022** மாலை **4.00** மணி வரை |
| (இ) பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளி படிவம் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் | .. | **22.06.2022** பிற்பகல் **2.00** மணி வரை |

(ஈ) பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் பதிவு அஞ்சல் ஒப்புதலுடன் அலுவலகத்திற்கு வந்து சேருவதற்கான கடைசி நாள் **22.06.2022** பிற்பகல் **2.00** மணி வரை மட்டுமே. அதற்கு பின்னர் வரும் படிவங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்கப்படமாட்டாது. அஞ்சல் தாமதத்திற்கு ஒன்றியம் பொறுப்பாகாது. பதிவு அஞ்சல் மூலம் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் ஒப்பந்தப்புள்ளி குழுவினரால் திறக்கும் பொழுது ஒப்படைக்கப்படும்.

உ) நேரடியாக அலுவலகத்தில் ஒப்பந்தப்புள்ளி படிவத்தை சேர்க்க விரும்பும் ஒப்பந்தப்புள்ளி விண்ணப்பதாரர்கள் **22.06.2022** அன்று அலுவலகத்தில் காலை **10.00** மணிக்கு வைக்கப்படும் அதற்கான பெட்டியில் **22.06.2022** அன்று பிற்பகல் **2.00** மணி வரை நேரடியாக சேர்க்கலாம்.

ஊ) **ஒப்பந்ததாரர்களின் ஆலோசனை கூட்டம் நடைபெறும் நாள்** (Prebid meeting) 11.06.2022 **காலை** 11:00 **மணி.**

5. (அ) பகுதி (I) மற்றும் பகுதி (II) ஆகிய இரண்டு படிவங்கள் அடங்கிய டெண்டர் கவர் குழுவினரால் திறக்கும் நாள் மற்றும் நேரம் : 22.06.2022 பிற்பகல் 2.45 மணி அளவில்

(ஆ) ஒப்பந்தப் புள்ளி படிவம் திறக்கும் இடம் : கடலூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றிய அலுவலகம்,
**சேத்தியாதோப்பு,**
**புவனகிரி வட்டம்,**
**கடலூர் – 608702.**

(இ) 22.06.2022 அன்று மாலை 2.45 மணிக்கு இரண்டு கவர்கள் உள்ளடங்கிய பெரிய உறையை பிரித்து அதில் உள்ள பகுதி I தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளிகள் (Technical Bid) மட்டும் திறக்கப்படும்.

(ஈ) மேலும் பகுதி I தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் (Technical Bid) ஒப்பந்தப்புள்ளி விண்ணப்பதாரர்கள்/பிரதிநிதிகள் முன்னிலையில் ஒப்பந்த குழுவினரால் பிரிக்கப்பட்டு பரிசீலிக்கப்படும்.

(உ) ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்கும் நாளில் ஒப்பந்தப்பணி மேற்கொள்ளும் வாகனத்தின் அனைத்து ஆவணங்களும் ஒப்பந்தப்புள்ளி விண்ணப்பதாரரின் பெயரில் நடைமுறையில் அவசியம் இருத்தல் வேண்டும். அன்றைய தேதியில் அவ்வாறு இல்லையெனில் படிவம் தகுதியற்றது என்று நிராகரிக்கப்படும்.

(ஊ) குழுவினரின் தொழில்நுட்ப ஆய்வில் தகுதி பெறும் ஒப்பந்தப்புள்ளி விண்ணப்பதாரர்கள் மட்டுமே வணிக நுட்ப பிரிவுக்கு தகுதியானவர்களாக கருதப்படும்.

(எ) ஒப்பந்த விலைப்புள்ளி விண்ணப்பதாரர்களின் முழுமையான தொழில்நுட்ப ஆய்வுக்குப்பின்னர் தகுதியுடையவர்களின் வணிக நுட்ப பிரிவு ஒப்பந்தப்புள்ளி கவர் திறக்கப்படும்.

6. எந்த ஒரு ஒப்பந்தப் புள்ளியை ஏற்கவோ/மறுக்கவோ/நிராகரிக்கவோ மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு தொடர்பாக பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ மாற்றம் செய்யவோ, நிராகரிக்கவோ பொது மேலாளர் அவர்களுக்கு முழு அதிகாரம் உண்டு.

7. (அ) <u>**முன்வைப்புத்தொகை வரைவோலையாக (DD) மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும்.**</u>

(ஆ) முன் வைப்புத்தொகை (Earnest Money Deposit) பொது மேலாளர், கடலூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிட். **சேத்தியாதோப்பு** என்ற பெயருக்கு **சேத்தியாதோப்பில்** மாற்றத்தக்க வகையில் கேட்பு வரைவோலையாக (Demand Draft) சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். இவ்வாறாக சமர்ப்பிக்கப்படும் வரைவோலைகள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும். (பண ஆணை, அஞ்சல் ஆணை, காசோலைகள ஏற்கப்படமாட்டாது).

(இ) முன்வைப்புத்தொகையாக 700 கிலோ முதல் 1200. கிலோ வரை சுமை ஏற்றும் திறன் உள்ள வாகனங்களுக்கு ரூ.5000/–ம், 1.25 டன் முதல் 2.4 டன்வரை உள்ள வழித்தட வாகனங்களுக்கு ரூ.7500/–ம், 2.5 டன் **அதற்க்கு மேலும்** உள்ள வாகனங்களுக்கு ரூ.10000/–ம், **சேத்தியாதோப்பில்** மாற்றத்தக்க வகையில் வங்கி வரைவோலையாக செலுத்தப்பட வேண்டும்.

8. ஒப்பந்த படிவத்தை www.tenders.tn.gov.in என்ற இணையதளத்திலிருந்து இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். மேலும் பூர்த்தி செய்யப்பட்ட டெண்டர் படிவங்களை "E" டெண்டர் மூலமாகவும் சமர்ப்பிக்கலாம். (www.tntenders.gov.in)

9. ஒப்பந்தகாலம் மேற்குறிப்பிட்ட ஒப்பந்த பணி ஒப்புதலளிக்கப்பட்டுள்ள தேதியிலிருந்து இரண்டு ஆண்டுகள் ஆகும்.

பொது மேலாளர்.

கடலூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிட்., சேத்தியாதோப்பு.

விருத்தாசலம் மெயின்ரோடு,புவனகிரிதாலுக்கா,சேத்தியாதோப்பு -608 702,

2022-25- ஆம் ஆண்டுகளுக்கான மூன்று ஆண்டு காலத்திற்கு வடபாதி, மாங்குளம், மங்களூர், ஆவினங்குடி, வேப்பூர், மாளிகைமேடு மற்றும் சேத்தியாதோப்பு ஆகிய தொகுப்பு பால் குளிவிப்பு மையங்களுக்கு பால் சேகரிப்பு பணி / திரவ நைட்ரஜன் மற்றும் தாது உப்பு கலவை விநியோக பணி / பால் உபபொருட்கள் விநியோக பணி / தலைவர் மற்றும் பொது மேலாளர் அலுவலக பணி ஆகிய பணிகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் வாடகைக்கு வாகனங்களை இயக்குவதற்கு ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

பால் கொள்முதல் வழித்தடங்கள் / பி.எம்.சி வழித்தடங்கள்

| வ. எண் | வழித் தடத்தின் பெயர் | தொகுப்பு பால் குளிர்விப்பு மையத்தின் பெயர் | கொள்ளளவு டன்னில் | தோராயமாக நாளொன்றுக்கு இயக்க வேண்டிய தூரம் (கி.மீ.ல்) |
|---|---|---|---|---|
| 1 | கோனூர் | ஆவினங்குடி | 0.7 – 1.2 | 112 |
| 2 | ஈ.கீரனூர் | ஆவினங்குடி | 1.25 - 2.4 | 106 |
| 3 | தொண்டாங்குறிச்சி | வேப்பூர் | 0.7 – 1.2 | 88 |
| 4 | அதர்நத்தம் | மங்களூர் | 0.7 – 1.2 | 90 |
| 5 | கொத்தனூர் | மங்களூர் | 0.7 – 1.2 | 104 |
| 6 | கண்டமத்தான் | வடபாதி | 1.25 - 2.4 | 116 |
| 7 | லக்ஷ்மணாபுரம் | வடபாதி | 1.25 - 2.4 | 136 |
| 8 | சிறுபாக்கம் | வடபாதி | 0.7 – 1.2 | 78 |
| 9 | மாங்குளம் | மாங்குளம் | 0.7 – 1.2 | 86 |
| 10 | நல்லூர் | வேப்பூர் | 0.7 – 1.2 | 115 |
| 11 | மேலருங்குணம் | மாளிகைமேடு | 0.7 – 1.2 | 168 |
| 12 | ராமாபுரம் | மாளிகைமேடு | 0.7 – 1.2 | 196 |
| 13 | கானூர் | சேத்தியாதோப்பு | 2.5 அல்லது அதற்கு மேல் | 228 |

| | | | | |
|---|---|---|---|---|
| 14. | பொது மேலாளர் அலுவலக பணி | தலைமை யிடம் சேத்தியாதோப்பு | இலகு ரக மகிழுந்து வாகனம் (2200 cc - 2750 cc) | 167 |
| 15. | திரவ நைட்ரஜன் மற்றும் தாது உப்பு கலவை விநியோக பணி | சேத்தியாதோப்பு | 1.25 - 2.4 டன் | 83 |
| 16. | தலைவர் அலுவலக பணி | தலைமை யிடம் சேத்தியாதோப்பு | இலகு ரக மகிழுந்து வாகனம் (2200 cc - 2750 cc) | 133 |
| 17. | பால் உபபொருட்கள் விநியோக பணி | தலைமையிடம் சேத்தியாதோப்பு | 2.5 அல்லது அதற்கு மேல் (முழுவதும் மூடப்பட்ட வாகனம்) இன்சுலேட் (Insulated) | 167 |
| 18. | நிதிநத்தம் | வேப்பூர் | 0.7 – 1.2 | 93 |
| 19. | இடைச்சித்தூர் | வேப்பூர் | 0.7 – 1.2 | 133 |

ஒப்பந்தப் புள்ளி விண்ணப்பதாரரின் கையொப்பம்.

(அலுவலக முத்திரையுடன்)

**2022-25- ஆம் ஆண்டுகளுக்கான மூன்று ஆண்டு காலத்திற்கு வடபாதி, மாங்குளம், மங்களூர், ஆவினங்குடி, வேப்பூர், மாளிகைமேடு மற்றும் சேத்தியாதோப்பு ஆகிய தொகுப்பு பால் குளிவிப்பு மையங்களுக்கு பால் சேகரிப்பு பணி / திரவ நைட்ரஜன் மற்றும் தாது உப்பு கலவை விநியோக பணி / பால் உபபொருட்கள் விநியோக பணி / தலைவர் மற்றும் பொது மேலாளர் அலுவலக பணி ஆகிய பணிகளுக்களின் ஒப்பந்தத்திற்கான வரையறைகளும் நிபந்தனைகளும்:**

1. ஒப்பந்தக் காலம் ஒப்பந்தப்பணி மேற்கொள்வதற்கு ஒப்புதலளிக்கப்பட்டுள்ள தேதியிலிருந்து இரண்டாண்டு காலம் ஆகும். ஒப்பந்தக் காலம் முடிவுற்று, அடுத்த வாகன ஒப்பந்தம் இறுதி செய்யப்படும் வரை அல்லது ஆறு மாதங்கள் வரை இவற்றுள் எது முந்தையதோ அதுவரை ஒப்பந்தக் காலத்தை நீட்டிக்க இவ்வொன்றியத்திற்கு அதிகாரம் உண்டு.

2. ஒப்பந்ததாரர், ரூ.10/– (ரூபாய் பத்து மட்டும்) செலுத்தி இவ்வொன்றியத்தின் இணை உறுப்பினராக வேண்டும். (இத்தொகை திருப்பித் தரத்தக்கதல்ல) இவருக்கு இவ்வொன்றியத் தேர்தலில் வாக்களிக்கவோ ஒன்றிய லாபத்தில் பங்கு பெறவோ உரிமை இல்லை.

3. ஒப்பந்ததாரர், அவரது ஒப்பந்தப்புள்ளி ஏற்பு ஆணை வழங்கப்பட்ட நாளிலிருந்து 10 நாட்களுக்குள் ஒப்பந்த விதிகளை முழுமையாக ஏற்றுக் கொண்டமைக்கு அத்தாட்சியாக ரூ.100/– மதிப்பிற்கான முத்திரைத்தாளில் ஒப்பந்த விதிமுறைகளை தட்டச்சு செய்து, ஒவ்வொரு தாளிலும் கையொப்பம் இட்டு இவ்வொன்றியத்துடன் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும். ஒப்பந்ததாரர் ஒப்பந்தப் பத்திரம் வழங்கிய பின்னரே முதல் போக்குவரத்து கட்டணம் வழங்கப்படும்.

4. ஒப்பந்த படிவத்துடன் முன் வைப்புத் தொகையை (Earnest Money Deposit) கேட்பு வரைவோலை (Demand Draft) மூலம் இவ்வொன்றியத்தில் **சேத்தியாதோப்பில்** மாற்றத்தக்கதாக செலுத்த வேண்டும். அதன் விபரம் பின்வருமாறு:

| | |
|---|---|
| 700 கிலோ முதல் 1 .200 டன் வரை | ரூ. 5,000/– |
| 1.25 டன் முதல் 2.4 டன்வரை | ரூ.7500/– |
| 2.5 டன் முதல் 4.5 டன்கள் வரை | ரூ. 10,000/– |

முன்வைப்புத் தொகை செலுத்தப்படாத டெண்டர் படிவங்கள் நிராகரிக்கப்படும்.

5. டெண்டர் ஏற்பு ஆணை வழங்கப்பட்ட நாளிலிருந்து ஏழு நாட்களுக்குள் பிணை வைப்புத்தொகையாக (Security Deposit) ஒவ்வொரு தடத்திற்கும் பின்வருமாறு தனித்தனியே ஒன்றியத்தில் செலுத்த வேண்டும். பிணை வைப்புத் தொகைக்கு எவ்வித வட்டியும் வழங்கப்படமாட்டாது.

| | |
|---|---|
| 700 கிலோ முதல் 1.200 டன் வரை | ரூ. 20,000/– |
| 1.25 டன் முதல் 2.4 டன்வரை | ரூ. 30,000/– |
| 2.5 டன் முதல் 4.5 டன்கள் வரை | ரூ. 40,000/– |

6. ஒப்பந்ததாரரோ அல்லது அவரது பிரதிநிதியோ ஒப்பந்த சட்ட திட்டங்களை (Terms and conditions) முழுமையாகவோ அல்லது ஏதாவது ஒன்றையோ பின்பற்றத் தவறி அதனால் ஒன்றியத்திற்கு நிதியிழப்பு ஏற்படின் பிணை வைப்புத்தொகை முழுமையாக முடக்கப்பட்டு திரும்ப வழங்கப்பட மாட்டாது.

7. ஒப்பந்ததாரர் ஒன்றியம் குறிப்பிடும் வங்கியில் சேமிப்புக் கணக்கு ஆரம்பித்து வங்கிக் கணக்கு எண்ணை இவ்வலுவலகத்திற்குத் தெரிவிக்க வேண்டும். போக்குவரத்துக் வாடகை கட்டணம் அவரது வங்கிக் கணக்கில் 15 நாட்களுக்கு ஒருமுறை இருசால் செய்யப்படும்.

8. **ஒப்பந்ததாரர், நிர்வாகக் காரணங்களுக்கேற்ப அவ்வப்போது நிர்ணயிக்கப்படும் வழித்தடத்தின் கால, தூர அட்டவணைகளைத் தவறாது பின்பற்றுதல் வேண்டும்.**

ஒப்பந்தப்புள்ளி விண்ணப்பதாரரின் கையொப்பம்.

9. **<u>ஒப்பந்த வாகனம் பற்றிய முக்கிய தகவல்கள்:</u>**

**அ. ஒப்பந்த வாகனத்தின் வடிவமைப்பு (MODEL) 01.01.2010 மற்றும் அதற்கு பிறகு தயாரிக்கப்பட்ட மாடல் வாகனங்கள் மட்டுமே தகுதியானதாகும்.**

ஆ ஒப்பந்த வாகனமும் அதில் பணிபுரியும் ஊழியர்களும் மோட்டார் வாகனச் சட்டத்திற்கும் அதில் அவ்வப்போது செய்யப்படும் மாற்றங்களுக்கும் உட்பட்டு பணியிடத்தில் இருக்க வேண்டும்

இ ஒப்பந்தப் படிவத்தில் குறிப்பிட்டுள்ள பதிவு எண் கொண்ட வாகனம் மோட்டார் வாகனக் காப்பீட்டுச் சட்டத்தின் கீழ் ஒப்பந்தக் காலத்திற்கு முழு காப்பீடு செய்ய வேண்டும்.

ஈ ஒப்பந்த வாகனம், தரமான தார்பாலின் அல்லது ஒரு இலகு உலோகத்தால் முழுமையாக மூடப்பட்டு பால் கேன்கள் மற்றும் கால்நடைத் தீவனத்திற்கு வெயில் மற்றும் மழையிலிருந்து பாதுகாப்பு அளிக்க வசதியுள்ளதாக இருக்க வேண்டும். மேல் பாகம் மூடப்படாத வாகனத்திற்கு ஒரு நாளைக்கு 100/– வீதம் தண்டத் தொகை வசுளிக்கபடும்

உ வாகனத்தில் பால் ஏற்றவும் இறக்கவும் ஏதுவாகவும் திரவ னைட்ரஜன் சப்ளை/ பால் உபபொருட்கள் விற்பனை செய்ய ஏதுவாகவும் வாகனத்தின் உள்புறம் விளக்கு பொருத்தப்பட்டிருக்க வேண்டும்.

<u>ஊ</u> **ஒப்பந்த வாகனம் தொடர்ந்து கால தாமதமாக வரும் பட்சத்தில் நாள் ஒன்றுக்கு ரூ.100 தண்ட தொகையாக பிடித்தம் செய்யப்படும்**

எ வாகனங்களின் நான்கு புறங்களிலும் **" ஆவின் ஒப்பந்த வாகனம்"** என்று பெரிய எழுத்துக்களில் தெளிவாக எழுதப்பட வேண்டும்.

10. ஒப்பந்ததாரர், காலை, மாலை இரு வேளைகளிலும் அங்கீகரிக்கப்பட்ட வழித்தடத்திலுள்ள சங்கங்களிலிருந்து பாலை சேகரம் செய்து, அவ்வழித்தடம் இணைக்கப்பட்டுள்ள தொகுப்பு பால் குளிர்விப்பு மையங்களுக்கு ஒன்றியத்தால் வழங்கப்பட்ட கால வரையறைக்குள் கொண்டு வந்து சேர்க்க வேண்டும்.

11. ஒப்பந்ததாரர் தொகுப்பு பால் குளிர்விப்பு மையங்களில் இருந்து இரு வேளைகளிலும் காலி கேன்களை பெற்று சங்கங்களுக்கு வழங்க வேண்டும். மேலும் டிரக் லைன் சீட்டில் கையொப்பம் பெற்று ஒன்றியத்தில் ஒப்படைக்க வேண்டும்.

12. ஒப்பந்த வாகனத்தில் பால் கேன்களுடன் பயணிகள், கால்நடைகள் அல்லது மற்ற பொருட்களை ஏற்றிச் செல்லக் கூடாது. அவ்வாறு ஏற்றிச் செல்வது தெரிய வந்தால், அந்த நேரத்திற்கான (Shift) போக்குவரத்துக் கட்டணம் வழங்கப்பட மாட்டாது. மற்றும் தண்டத் தொகை வசூலிக்கப்படும்

13. ஒப்பந்ததாரர் தொகுப்பு பால் குளிர்விப்பு மையங்களில் இருந்து சங்கங்களுக்கு அனுப்பப்படும் கால்நடைத் தீவனம் உள்ளிட்ட அனைத்து பொருட்களையும் கட்டணம் ஏதுமின்றி சங்கப் பொறுப்பாளரிடம் ஒப்படைக்க வேண்டும். அது போல சங்கங்களிடமிருந்து அனுப்பப்படும் அலுவலகத் தொடர்பான பொருள்களையும் கூடுதல் கட்டணம் ஏதுமின்றி ஏற்றி வர வேண்டும்.

14. வாகனத்தின் துப்புரவாளர் எப்போதும் வாகனத்தின் பின்புறத்தில்தான் இருக்க வேண்டும். வாகனம் இயக்கப்படும்போது ஓட்டுநர் மற்றும் துப்புரவாளர், புகைப்பிடித்தல், மது அருந்துதல் போன்ற ஒழுங்கீனங்கள் ஒன்றியத்தின் கவனத்திற்கு வரும் போது கடும் நடவடிக்கை எடுப்பதுடன் தண்டத் தொகை வசூலிக்கப்படும்.

ஒப்பந்தப்புள்ளி விண்ணப்பதாரரின் கையொப்பம்.

15. **தொகுப்பு பால் குளிர்விப்பு மையத்தில்** மின்தடை, இயந்திரக் கோளாறு போன்ற பல்வேறு காரணங்களால் தடை ஏற்பட்டால், **தொடர்புடைய** அதிகாரியின் உத்தரவின்படி அவர் சொல்லும் மையங்களுக்கு பாலை கொண்டு சேர்க்க வேண்டும். **திரவ நைட்ரஜன் சப்ளை மற்றும் / பால் உபபொருட்கள் விற்ப்பனைக்கு இயக்கப்படும் தூரத்திற்கு டீசல் கட்டணம் வழுங்கபடமாட்டாது**

16. ஒப்பந்ததாரர் காலதூர அட்டவணைப்படி சங்கங்களிடமிருந்து பால் சேகரம் செய்ய வேண்டும். குறிப்பிட்ட நேரம் கடந்து நிலையத்திற்குச் சென்று பால் கெட்டுப் போனாலோ அல்லது சங்கங்களிடமிருந்து பால் சேகரம் செய்ய தவறினாலோ கீழ்க்கண்டவாறு வாடகை கட்டணத்தில் பிடித்தம் செய்யப்படும்.

அ. ஒப்பந்த வாகனம் நிலையத்திற்கு தாமதமாக வந்து அதனால் பால் கெட்டு விட்டால் அதன் மொத்த கிரயத் தொகை போக்குவரத்துக் வாடகை கட்டணத்தில் பிடித்தம் செய்து சங்கத்திற்கு வழங்கப்படும்.

ஆ. ஒப்பந்த வாகனம் குறிப்பிட்ட நேரத்திற்குள் நிலையத்தைச் சென்றடைந்தாலும் மேற்புறம் மூடப்படாமல் இருந்து பால் கெட்டு விட்டால் அதற்குரிய இழப்புத்தொகை போக்குவரத்துக் வாடகை கட்டணத்தில் பிடித்தம் செய்து சங்கத்திற்கு வழங்கப்படும்.

இ. சங்கங்களிலிருந்து பால் சேகரம் செய்யாமல் வரும் பட்சத்தில், முந்தைய வேளையில் அந்த சங்கத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட விலை விகிதத்தில் ஒப்பந்தாரர் போக்குவரத்து வாடகைப் பில்லில் பிடித்தம் செய்து அச்சங்கங்களுக்கு வழங்கப்படும்.

ஈ. பாலை வண்டியில் ஏற்றும் போதும், இறக்கும் போதும், போக்குவரத்திலும் பால் சிந்தி விட்டால் அதன் கிரயத்தொகை போக்குவரத்துக் வாடகை கட்டணத்தில் பிடித்தம் செய்து சங்கத்திற்கு வழங்கப்படும்.

17. ஒன்றியத்திலிருந்து சங்கங்களுக்கும், சங்கங்களிடமிருந்து ஒன்றியத்திற்கும் வாகனத்தில் அனுப்பப்படும் கேன்கள் மற்றும் கேன் மூடிகளுக்கு முறையான கணக்கு பராமரிக்கப்பட வேண்டும். கேன்கள் மற்றும் கேன் மூடிகள் தொலைத்து விட்டாலோ அல்லது குறைவு ஏதேனும் ஏற்பட்டாலோ அல்லது சேதாரம் ஏற்பட்டாலோ அதற்கான இழப்புத் தொகை ஒப்பந்ததாரரது போக்குவரத்து பில்லில் பிடித்தம் செய்யப்படும்.

18. ஒப்பந்ததாரர், அங்கீகரிக்கப்பட்ட வாகனம் பழுதடைந்தால் தன் சொந்த பொறுப்பில் மாற்று வாகனம் இயக்குதல் வேண்டும். அதற்காக கூடுதல் கட்டணம் ஏதும் வழங்கப்பட மாட்டாது.

ஒப்பந்தப்புள்ளி விண்ணப்பதாரரின் கையொப்பம்.

19. ஒப்பந்ததாரர் அங்கீகரிக்கப்பட்ட வாகனத்தை மட்டுமே இயக்க வேண்டும். தவிர்க்க இயலாத காரணங்களான விபத்து, தகுதிச்சான்று பெறுதல் போன்ற சமயங்களில் ஒன்றியப் பொது மேலாளரின் முன் அனுமதி பெற்று மாற்று வாகனம் இயக்கப்படலாம். முன்அனுமதியின்றி மாற்று வாகனம் இயக்கப்படுமாயின் நாளொன்றுக்கு ரூ.300/– வீதம் அபராதத் தொகை வசூலிக்கப்படும்.

20. முன் அனுமதி பெற்று மாற்று வாகனம் இயக்க அனுமதிக்கப்பட்டாலும் ஒப்பந்தத்தில் உள்ள இதர அனைத்து நிபந்தனைகள் பொருந்தும். மாற்று வாகனம் இயக்க அதிக பட்சமாக 30 நாட்களுக்கு மட்டுமே அனுமதிக்கப்படும். அதன் பின்னர் நாள் ஒன்றுக்கு ரூ. 100 வீதம் அபராத தொகை வசூலிக்கப்படும்.

21. <u>மாற்று வாகனம், மாற்று ஏற்பாடாகக் கீழ்க்கண்ட சந்தர்ப்பங்களில் அனுமதிக்கப்படும்.</u>

அ. ஒப்பந்த வாகனம் பழுது ஏற்பட்டு இயக்க இயலாத நிலையில் அவருடைய பெயரில் அங்கீகரிக்கப்பட்ட சுமை ஏற்றுவதற்கான கொள்ளளவு மற்றும் மாடல் உள்ள மாற்று வாகனம் ஒன்றிய அனுமதி பெற்று இயக்க அனுமதி வழங்கப்படும்.

ஆ. ஒப்பந்ததாரர் ஒப்பந்தக் காலத்தில் இறக்கும் பட்சத்தில் அவரின் சட்டபூர்வமான வாரிசுதாரர்கள் மட்டுமே வாகனத்தை தொடர்ந்து இயக்க முன்வரும் பட்சத்தில் ஒன்றிய விதிமுறைகளுக்குட்பட்டு அனுமதிக்கப்படும்.

இ. இயக்கப்படும் வாகனம் ஒப்பந்ததாரரின் சட்டப்பூர்வ வாரிசுதாரரின் பெயரில் மாற்றம் செய்வித்து இருக்க வேண்டும்.

22. வாகன டிரிப் ஷீட் மற்றும் இதர சட்டபூர்வ ரிக்கார்டுகளை ஒப்பந்ததாரர் தன் சொந்த பொறுப்பில் பராமரிக்க வேண்டும்.

23. இந்திய வருமான வரி சட்டப்படி ஒப்பந்ததாரர் தனது பெயரில் உள்ள நிரந்தர வருமான வரி கணக்கு எண் குறித்த விவரங்கள் ஒன்றியத்தில் சமர்ப்பிக்க வேண்டும் தவறாது இந்திய வருமானவரி சட்டம் பற்றிய விதிமுறைகளை பின்பற்றி ஒவ்வொரு போக்குவரத்து வாடகை கட்டண பில்லிலும் வருமான வரி பிடித்தம் செய்யப்படும்.

24. ஒப்பந்த வாகனம், விபத்து ஏற்பட்டு நிரந்தரமாக இயக்க இயலாத நிலை ஏற்படுமாயின், வட்டார போக்குவரத்து அலுவலரிடம் அத்தாட்சிக் கடிதம் பெற்று ஆர்.சி., தமிழ்நாடு பர்மிட் மற்றும் இன்சூரன்ஸ் தனது பெயரில் இருப்பின் அங்கீரிக்கப்பட்ட கொள்ளளவு உடைய மாற்று வாகனதை ஒன்றியத்தின் முன் அனுமதியுடன் ஒப்பந்த காலம் வரை இயக்கலாம்.

25. வாகன ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்கும் போது சாலை சுங்க வரிக்கட்டணத்தை விலைப்புள்ளியுடன் சேர்த்து அளிக்க வேண்டும். தனியாக சுங்க வரிக்கட்டணம் வழங்கப்படமாட்டாது.

ஒப்பந்தப்புள்ளி விண்ணப்பதாரரின் கையொப்பம்.

26. ஒப்பந்ததாரர், பொது மேலாளர், கடலூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் அவர்களால் அவ்வப்போது நிர்ணயம் செய்யும் விதிமுறைகளை தவறாமல் கடைபிடிக்க வேண்டும்.

27. போக்குவரத்து கட்டணப் பட்டியல் 15 நாட்களுக்கு ஒரு முறை 3 நகல்களில் 3 நாட்களுக்குள் சமர்ப்பிக்க வேண்டும். அவ்வாறு 3 நாட்களுக்குள் பெறப்படும் பட்டியல் அடுத்து வரும் 10 நாட்களுக்குள் பட்டுவாடா செய்யப்படும். தாமதமாக சமர்ப்பிக்கப்படும் பட்டியல்கள் காலம் தாழ்த்தி பட்டுவாடா செய்யப்படும். காலதாமதத்திற்காக ஒப்பந்ததாரர் நட்ட ஈடு கோர இயலாது. இதற்காக ஒப்பந்ததாரர்கள் எந்தவித பிரச்சனையிலும் ஈடுபடக்கூடாது.

28. ஒப்பந்தக் காலம் முடிவடைந்ததுடன் ஒப்பந்தபணி சார்ந்துள்ள அலுவலரிடம் பாக்கியில்லா சான்றுகள் (No Due Certificate) சமர்ப்பித்த பின்னரே கடைசி போக்குவரத்து பட்டியல் விடுவிக்கப்படும். மேலும், அந்த ஆண்டின் ஒன்றிய இறுதித் தணிக்கை முடிவுற்ற பின்னரே பிணை வைப்புத்தொகை திரும்ப வழங்கப்படும். இத்தொகைக்கு வட்டி ஏதும் வழங்கப்பட மாட்டாது.

29. ஒப்பந்ததாரர் தமது வாகனங்களை தொகுப்பு பால் குளிரூட்டும் நிலையத்தில் நிறுத்தி சுத்தம் செய்யவோ, வாகனத்தை கழுவுதலோ கடுமையான தண்டனைக்கு உட்பட்டதாகும். அவ்வாறு கழுவும் பட்சத்தில் ஒவ்வொரு முறைக்கும் ரூ. 1000/– அபராதம் விதிக்கப்படும்.

30. ஒப்பந்ததாரர், ஒப்பந்த காலத்தில், தானாக ஒப்பந்தத்தை ரத்து செய்து வாகனம் இயக்கப்படாமல் ஏற்படும் இழப்பிற்கோ அல்லது, வேலை நிறுத்தம், பந்த் மற்றும் இயற்கை சீற்றம் போன்ற எதிர்பாராத காரணங்களினால் வாகனம் இயக்கப்படாமல் போனாலோ, ஒன்றியத்திடமிருந்து எந்தவித இழப்பீடும் கோர முடியாது.

31. ஒப்பந்ததாரர், ஒப்பந்த வாகனத்தை திடீரென்று நிறுத்தி விட்டால்,

அ. பிணை வைப்புத் தொகை முழுவதும் பறி முதல் செய்யப்படும்.

ஆ. அவ்வாறு நிறுத்தப்படும் நாளில் நிலுவையில் உள்ள போக்குவரத்துக் கட்டணம் விடுவிக்கப்பட மாட்டாது.

இ. அங்கீகரிக்கப்பட்ட போக்குவரத்துக் கட்டணத்தை விட அதிகமாக ஒன்றியத்தால் செலவிடப்பட்டிருந்தால், ஒப்பந்ததாரர் பெயரில் நிலுவையில் உள்ள போக்குவரத்துக் வாடகை கட்டணத்திலிருந்து பிடித்தம் செய்யப்படும். அதையும் விட அதிக செலவினங்களுக்கு ஒப்பந்ததாரரின் மீது சட்டப்பூர்வமான நடவடிக்கை மூலம் வசூல் செய்யப்படும்.

ஒப்பந்தப்புள்ளி விண்ணப்பதாரரின் கையொப்பம்.

32. ஒப்பந்த காலத்தில் டீசல் விலை உயர்வு/குறைவு ஏற்பட்டால் ஒப்பந்த கட்டணத்தில் உயர்வு/குறைவு ஏற்படுத்தப்படும். இந்த ஒப்பந்தக் கட்டணம் உயர்வு/குறைவு ஒப்பந்த வாகனத்தின் கொள்ளளவு மற்றும் திறனுக்கு ஏற்ப கணக்கிடப்படும்.

33. வாகன உதிரி பாகம் விலை, டயர் விலை, சாலை வரி காப்பீடு செலவினங்கள் போன்றவற்றில் உயர்வுகள் ஏற்பட்டால் ஒன்றியம் அதற்காக எவ்விதத்திலும் வாடகை கட்டணத்தை உயர்த்தி வழங்காது

34. ஒப்பந்ததாரரின் வாகனத்தில் பணிபுரியும் அனைத்து ஊழியர்களுக்கும், ஈ. பி. எப்., ஈ. எஸ். ஐ. ஆகியவை போக்குவரத்து கட்டணத்தில் பிடிக்கப்படுவதால் பணியாளர்களின் பெயர், முகவரி, பிறந்த தேதி மற்றும் அவர்களுக்கு வழங்கும் ஊதியம் போன்ற விவரங்கள் ஒன்றியத்திற்கு தெரிவிக்கப்பட வேண்டும். குறைந்த பட்சம் ஒரு நாள் ஊதியம் பெற்றவராயினும், வருங்கால வைப்பு நிதி திட்டத்தில் சேர்க்கப்பட வேண்டும்.

35. ஒப்பந்ததாரர், ஒன்றியத்திலிருந்து சங்கங்களுக்கு அனுப்பப்படும் ட்ரக் ஸ்லிப், ஒப்புதல் கடிதம், பால்பண பட்டுவாடா பட்டியல்களை தவறாமல் சம்பந்தப்படட சங்கங்களுக்கு கொண்டு சேர்க்க வேண்டும். அதே போல் சங்கங்களிடமிருந்து ஒன்றியத்திற்கு அனுப்பப்படும் அனைத்து பொருள்களையும் தவறாமல் கொண்டு சேர்க்க வேண்டும். வாகன டிரிப் ஷீட் மற்றும் இதர சட்டபூர்வ ரிகார்டுகளை ஒப்பந்ததாரர் தன் சொந்த பொறுப்பில் பராமரிக்க வேண்டும்.

36. ஒப்பந்த வாகனத்தில் ஒப்பந்ததாரரோ அல்லது அவரின் பிரதிநிதிகளோ பால் திருடுதல் அல்லது வேறு முறைகேடுகள் செய்வது தெரியவருமாயின், அவ் வழித்தடத்தில் ஆரம்ப காலம் முதல் முறைகேடுகள் கண்டு பிடிக்கும் வரை ஏற்பட்ட மொத்த குறைவு அல்லது இழப்பிற்கும் அவரது போக்குவரத்து வாடகை கட்டணத்திலிருந்து பிடித்தம் செய்வதுடன் அன்னாரது ஒப்பந்தமும் ரத்து செய்யப்படும்.

37. ஒன்றியத்தில் பணிபுரிபவர்கள், அவர்களது நெருங்கிய உறவினர்கள், நிர்வாகக் குழு உறுப்பினர்கள் இவ்வொப்பந்தத்தில் பங்கேற்க முடியாது, இவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டாலும் பிற்காலத்தில் இது குறித்து தெரிய வரும்போது அவரது ஒப்பந்தம் எவ்வித முன் அறிவிப்புமின்றி ரத்து செய்யப்படும்.

38. இவ்வொன்றியத்தில் முந்தையக் காலங்களில் ஒப்பந்ததாரராக இருந்து அவ்வொப்பந்தக் காலத்தில் ஒப்பந்த விதிமுறைகளை மீறியமைக்காக ஒப்பந்த விதிகளின்படி ஒப்பந்தம் இரத்து செய்யப்பட்டிருந்தால் அந்த ஒப்பந்ததாரர், நேரடியாகவோ, மறைமுகமாகவோ டெண்டரில் கலந்து கொள்ள இயலாது. பின்வரும் ஒப்பந்த காலத்தில் அவ்வாறு தெரிய வந்தால் ஒப்பந்தம் உடனடியாக இரத்து செய்யப்படும்.

39. **இவ்வொன்றியத்தில் குறிப்பிட்ட வழித்தடத்தில் ஒப்பந்தத்தில் இயக்கபட்டுவரும் வாகனம் ஒப்பந்தகாலம் முடிவடைந்து பின்னர், ஆறு மாதம் நீடிப்பு ஆணை வழங்கப்படும் பட்சத்தில், அக்குறிப்பிட்ட வழிதடத்திற்கு, இடையில் ஒப்பந்தம் கோரப்படுமாயின், அக்குறிப்பிட்ட வழித்தடத்தில் இயக்கப்பட்டுவரும் ஒப்பந்த வாகனத்தை அவ்வாகன உரிமையாளர், அதே வழித்தட ஒப்பந்தத்தில் மட்டுமே கலந்துகொள்ள முடியும். அவர் அவ்வாகனத்தை வேறு வழித்டத்திருக்கு விண்ணப்பிக்க கூடாது.**

ஒப்பந்தப்புள்ளி விண்ணப்பதாரரின் கையொப்பம்.

40. ஒப்பந்ததாரர் ஒப்பந்தக் காலத்தில் தனியார் பால் பண்ணையை ஊக்குவிக்கும் காரியங்களில் நேரிடையாகவோ, மறைமுகமாகவோ ஈடுபட்டால் அவரின் ஒப்பந்தம் எந்தவித முன்னறிவிப்புமின்றி ரத்து செய்யப்படுவதுடன் பிணை வைப்புத் தொகையும் பறிமுதல் செய்யப்படும்.

41. ஒப்பந்ததாரர் வண்டியில் பணிபுரியும் டிரைவர் மற்றும் துப்புறவாளகளுக்கு அரசு விதிகளின்படி பிரதிமாதம் 7 ஆம் தேதிக்குள் சம்பளம் வழங்கிய விபரத்துடன் வருங்கால வைப்பு நிதி மற்றும் தொழிலாளா மாநில ஈட்டுறுதி கழக சந்தா தொகையை தேவையான விபரங்களுடன் சட்டபூர்வ படிவங்களில் குறிப்பிட்டு வாகன வாடகைப் பட்டியலை சமர்ப்பிக்க வேண்டும். அவர்களுக்கு சீருடைகள் ஏற்பாடு செய்து தரவேண்டும்.

42. அங்கீகரிக்கப்பட்ட ஒப்பந்தத்தை பொது மேலாளர், **கடலூர்** மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம் லிட்., எந்தவித காரணமும் **இன்றி 15** நாள் முன்னறிவிப்பு செய்து ரத்து செய்யும் அதிகாரம் படைத்தவர் ஆவார்.

அவ்வாறு ஒன்றிய நிர்வாக காரணங்களை முன்னிட்டு ஒப்பந்தம் ரத்து செய்யப்படும் போது அவ்வழித்தடத்தில் இணைக்கப்பட்டுள்ள எல்லா சங்கங்களிடமிருந்து பாக்கியில்லா சான்று (No Due Certificate) பெறப்பட்டு **30** நாட்களுக்கு பின்னர் ஈட்டுறுதி பிணைமுறி (Indemnity Bond) அளித்திடுதல் வேண்டும் அதன் பின்னர் ஒன்றியம் நிர்ணயம் செய்த கால அளவில் பிணை வைப்புத் தொகை விடுவிக்கப்படும்.

43. மேற்படி ஒப்பந்த விதிகள், தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தம் 1998–ம் ஆண்டு சட்டம் 43 (act) மற்றும் அதைத் தொடர்ந்து தமிழக அரசால் இயற்றப்பட்ட விதிகள் (Rules) ஆகியவற்றிற்குட்பட்டதாகும்.

44. நீதிமன்ற வழக்குகள் கடலூர் மாவட்டம், **கடலூர்க்கு** உட்பட்டது.

45. **பால் உப பொருட்கள் விநியோக** ஒப்பந்த வாகனம் முழுமையாக இன்சுலேட் செய்யப்பட்டு குளிர் தன்மை காக்கும் தன்மை உடையதாக இருக்க வேண்டும்.

46. பகுதி 1 ல் **தொழில் நுட்ப படிவத்தில்** தேர்வு செய்யப்பட்ட விற்பனை வழித்தட இன்சுலேட்டர் வாகனங்கள் அதன் உண்மை ஆவணங்கள் பரிசீலனையின் போது ஒன்றிய தேர்வுக்குழுவின் முன் சம்பந்தப்பட்ட வாகனத்தை நேடையாக காண்பித்து குளிர்தன்மை காக்கும் வகையில் அவ்வாகனம் உள்ளதா என்பதை தேர்வுகுழு நன்கு பரிசோதித்து அவ்வாகனம் பாக்கெட்பால் வினியோகத்திற்கு ஏற்றது என்று சான்றிதழ் வழங்கும்பட்சத்தில் மட்டும் அவ்விண்ணப்பத்தின் பகுதி ஆ பிரிக்கப்படும்.

47. ஒப்பந்ததாரர், நிர்ணயம் செய்யப்பட்ட கொள்ளளவு உள்ள பால் மற்றும் பால் பொருட்கள், கேன்கள்/டப்புகள் மற்றும் ஒன்றியத்திலிருந்து அனுப்பப்படும் இதரப் பொருட்களை வண்டியில் ஏற்றிச் செல்ல வேண்டும்.

ஒப்பந்தப்புள்ளி விண்ணப்பதாரரின் கையொப்பம்.

48. ஒப்பந்ததாரர் பால் /பால் உபபொருட்களை ஒன்றியத்தால் அங்கீகரிக்கப்பட்ட வழித்தடத்தில் நிர்ணயிக்கப்பட்ட கால அட்டவணையின்படி முகவர்கள்/நிறுவனங்களுக்கு விநியோகம் செய்ய வேண்டும். கால தாமதமாக விநியோகம் செய்யப்படும் போது வேளை ஒன்றுக்கு ரூ.1000/– அபராதம் விதிக்கப்படும்.

49. டாக்சியில் தொலைவு காட்டும் கருவி (Speedometer) சரியாக இயங்க வேண்டும். தொலைவு காட்டும் கருவி இயங்காத நிலையில் டாக்சியில் பயணம் செய்யும் அலுவலரால் தெரிவிக்கப்படும் தொலைவின் அடிப்படையில் மட்டுமே போக்குவரத்துக் கட்டணம் வழங்கப்படும்.

50. ஒப்பந்தம் செய்யப்பட்ட டாக்சியில் ஒன்றிய பால் சேகரிப்புக்குழு பிரிவு அலுவலர்கள் மற்றும்

பணியாளர்களுடன் பால்பண்ணை தொடர்பான பொருட்களையும் ஒப்பந்ததாரர் எவ்வித நிபந்தனையும் இன்றி ஏற்றிச் செல்ல வேண்டும்.

51. ஒன்றிய அலுவலர் குறிப்பிடும் இடத்தில் குறிப்பிடும் நேரத்தில் ஒப்பந்ததாரர் டாக்சியை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும். தவறினால் தண்டத்தொகை ரூ.100/– விதிக்கப்பட்டு வாடகையில் வசூல் செய்யப்படும். மேலும் மாற்று வாகனம் அமர்த்தப்பட்டு அதே பணிக்காக பயன்படுத்தப்படும். மாற்று வாகனத்திற்காக செலவிடப்பட்ட அதிகப்படியான தொகை ஒப்பந்ததாரரிடமிருந்து வசூலிக்கப்படும்.

52. ஒன்றிய பணிக்காக டாக்சி ஓடிக் கொண்டிருக்கும் போது, டாக்சியில் வெளி ஆட்களையோ ஒன்றியம் அனுமதிக்காத பொருட்களையோ ஏற்றக் கூடாது. இவ்வாறு செய்தால் அன்றைய வாடகை ரத்து செய்யப்படும்.

53. வாகன ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்கும் போது நெடுஞ்சாலை சுங்கவரியினை விலைப்புள்ளியுடன் சேர்த்து சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

54. 2022-25- **ஆம் ஆண்டுகளுக்கான மூன்று ஆண்டு காலத்திற்கு வடபாதி, மாங்குளம், மங்களூர், ஆவினங்குடி, வேப்பூர், மாளிகைமேடு மற்றும் சேத்தியாதோப்பு ஆகிய தொகுப்பு பால் குளிவிப்பு மையங்களுக்கு பால் சேகரிப்பு பணி / திரவ நைட்ரஜன் மற்றும் தாது உப்பு கலவை விநியோக பணி / பால் உபபொருட்கள் விநியோக பணி / தலைவர் மற்றும் பொது மேலாளர் அலுவலக பணி ஆகிய** பணிகளுக்கான வாகன ஒப்பந்த நிபந்தனைகள் அனைத்தையும் புத்தி சுவாதீனத்துடனும், சுய நினைவுடனும் ஏற்று ஒப்புதல் அளிக்கிறேன்.

ஒப்பந்தப் புள்ளி விண்ணப்பதாரரின் கையொப்பம்.

(அலுவலக முத்திரையுடன்)